**யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதினைந்து கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியகணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆண்டிற்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பளிப்புள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டில் ரூபா 28,406,985 மூலதனச்செலவினங்கள் சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் சொத்துக்கள் குறித்த தொகையால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீனங்கள் ஆகியவற்றை இனிவருங்காலங்களில் நிரந்தர சொத்துக்களின் பதிவேட்டில் உள்வாங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டில் பௌதீகரீதியில் காணப்பட்டிருக்காத நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 1,644,346 நிதிக்கூற்றுக்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறையல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் பௌதீகரீதியில் காணப்பட்டிருக்காத ரூபா 1,767,399 பெறுமதியான நடைமுறை சொத்துக்கள் நிதிக்கூற்றில் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | தொடர்ந்துவரும் நிதியாண்டுகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 12 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களினால் பயன்படுத்தப்படும் உழவு இயந்திரங்களுக்கான நாளாந்த வாகன ஓட்ட பதிவேடு சம்பவத்திரட்டு புத்தகங்கள், எரிபொருள் நுகர்வு பதிவேடுகள், வாகனத் திருத்த பதிவேடுகள் உரிய முறையில் பராமரிக்கப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 6,487,834 | நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டு புத்தகம், எரிபொருள் நுகர்வு பதிவேடு, வாகனத் திருத்த பதிவேடு | இந்த 12 நிறைவேற்றுகுழுக்களிலும் சுட்டிக்காட்டப்பட்ட பதிவேடுகள் உரிய முறையில் பேணப்படுவதன் மூலம் எரிபொருள் செலவு, சாரதி தரகுபணம் மற்றும் திருத்த செலவு என்பன சரியான முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | 12 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டு கணக்கறிக்கையில் வயற்காணி 9866 ஹெகரேயர் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தக்கூடிய வயற்காணி பெயர்ப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் ஆண்டுக்கான ஏக்கர் வரி மற்றும் வருமதி ஏக்கர் வரி ஆகியவற்றினை மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | 962,913 | வயற்காணி பெயர் பதிவேடுகள் | இனிவரும் காலத்தில் இவ் வயற்காணி பதிவேடானது இற்றைபடுத்தப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வயற்காணி பதிவேடுகள் உரிய முறையில் பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | 12 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 67 வருமதிகள் தொடர்பில் எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 10,654,295 | விரிவான பட்டியல் | வருமதி மீதிகள் தொடர்பான எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எழுத்துமூலமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 15 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டு | 89,414,474 | விரிவான பட்டியல் | எதிர்வரும் காலங்களில் சென்மதிகளுக்கான | சென்மதிகளுக்கான எழுத்துமூலமா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 106 சென்மதிகள் தொடர்பில் எழுத்துமூலமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | ன உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | சண்டிலிப்பாய் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த விதைநெல் வருமானத்தினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 208,200 | விதைநெல் விற்பனை கணக்கு | மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகை கூற்றில் விதை நெல் வருமானமாக காட்டப்பட்டிருந்த ரூபா 208,200 இற்கான விற்பனை தவறுதலாக கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. | விற்பனை கணக்கு தயாரிக்கப்பட்டு விதை நெல் வருமானம் முறைப் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டின் 170 எண்ணிக்கையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கான கொடுப்பனவினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1,906,614 | பெறுநர் ஒப்பம், பற்றுச்சீட்டின் மூலப்பிரதி, பெறுவனவு அறிக்கை, கூறுவிலைகள், வேண்டுகை பத்திரம் | எதிர்வரும் காலத்தில்இத் தவறுகள் திருத்தப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின் மூலம் கொடுப்பனவினை சான்றுதிபடுத்த கூடிய ஆவணங்கள் உரிய முறையில் பேணப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும். | கொடுப்பனவின் போது கொடுப்பனவிற்குரிய சான்றுகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| உடுவில் கமநலசேவை நிறைவேற்றுக் குழுவின் கடன்கொடுநர் பட்டியலின் படியான சென்மதிகளின் மீதி | 4,804,363 | 4,178,061 | 626,302 | இனிவரும் காலங்களில் இத்தவறு நிகழாமல் சென்மதிகள் சரியான பெறுமதியே நிதிநிலமைகூற்றில் காட்டப்படும். | சென்மதிகளின் சரியான பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பெறுமதி ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | | |
| | (i) பிரிவு 53 | 15 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - | கமத்தொழில் காணிப்பதிவேடுகள் தயாரித்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கமத்தொழில் காணிப்பதிவேடு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பிரிவு 55 | 15 கமநல சேவை நிறைவேற்று குழுக்களின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - | 15 நிறைவேற்று குழுக்களினாலும் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள வயற்காணிகள் தற்போழுது Google Map உதவியுடன் அளவீடு செய்யப்பட்டு வயல்காணியின் அளவுகள் பெறப்பட்டுள்ளன GEO Goviya வேலைத்திட்டத்தின் ஊடாகவும் ஒவ்வொரு வயல் நிலமும் GPS அளவீட்டின் ஊடாகவும் அளவீடு செய்யப்படுகின்றது. | நில அளவை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (iii) பிரிவு 56(i) | 12 கமநல சேவை நிறைவேற்று | - | ஏக்கர் வரிப்பதிவேடானது | ஏக்கர் வரிப் பதிவேடு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | குழுக்களினால் ஏக்கர்வரிப் பதிவேடானது நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. | | இற்றைப்படுத்தி பேணுவதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவை பூரணப்படுத்தப்பட்டதும் கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை** | | | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி 502(2) | 15 நிறைவேற்று குழுக்களினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவை பௌதீக ரீதியில் செவ்வை பார்க்கப்பட்டிருக்கவில்லை. | - | 13 நிறைவேற்று குழுக்களினாலும் நிலையான சொத்து தொடர்பான பதிவேடுகள் உரிய முறையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவை பௌதிக ரீதியாகவும் செவ்வை பார்க்க நடவடிவடிக்கை எடுக்கப்படும். | சொத்துப் பதிவேடு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதி ஒழுங்கு விதி 880, 881 | பிணைப்பணம் செலுத்த வேண்டிய 39 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 267,500 | நிறைவேற்றுக்குழுக்களின் உத்தியோகத்தர்கள் இவ்வாண்டுக்குள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிணைப்பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபம்** | | | | |
| (i) | கமநல அபிவிருத்தி திணைக்களத் | 15 கமநலசேவை நிறைவேற்று குழுக்களினால் | 41,076,892 | நிலுவைகள் தீர்த்து வைக்கப்பட | சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தின் 2022.06.01 ஆந் திகதிய 7/5/12/11 ஆம் இலக்க கடிதம் | மாவட்டத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளர், கமநல சேவை நிர்வாகக்குழுக்களுக்கு இடையில் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் வருமதி, சென்மதி நிலுவைகளை 2022.07.28 மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் கமநல சேவை நிலையத்திற்குமான இடையிலான கொடுக்கல்வாங்கல்களை 2022.08.25 ஆந் திகதிகளுக்கு முன்னர் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2022.01.05 ஆந் திகதிய 7/02/13/பொது ஆம் இலக்க கடிதம் | 09 கமநல சேவை நிறைவேற்று குழுக்களின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரால் மீளாய்வாண்டுக்கான முன்நிகழ்ச்சித்திட்டம், தினக்குறிப்பேடு மற்றும் தினக்குறிப்பு விலகல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - | இனிவரும் காலங்களில் நிறைவேற்றுக் குழுக்களின் தினக் குறிப்பேடு மற்றும் தினக்குறிப்பு விலகல்கள் ஆகியவற்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 15 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 22,404,331 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,144,000 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளில் ரூபா 18,260,331 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உரும்பிராய் கமநல சேவை செயற்குழுவின் கூட்டுமொத்தம் ரூபா 191,564 இழப்பினை ஏடுகளில் இருந்து பதிவழித்தல் நடவடிக்கை 27 ஆண்டுகளாக சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1995 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு ஏற்பட்ட இழப்புகளின் கூட்டு மொத்தம் ரூபா 191,564 காட்டப்பட்டுள்ளது. இதனை நிதிப் பிரமாணத்திற்கு அமைய முறையாக பதிவழித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரியப்படுத்துவதுடன் இழப்பு பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இழப்பு பதிவேடு பராமரித்தல் மற்றும் இழப்பினை ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சாவகக்சேரி கமநல சேவை செயற்குழுவின் கூட்டுமொத்தம் ரூபா 901,925 மற்றும் இழப்பினை பதிவழித்தல் நடவடிக்கை 21 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் காணப்பட்ட நட்டத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான நிதிப் பிரமாணத்திற்கு அமைய முறையாக பதிவழித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இது தொடர்பான இழப்பு பதிவேடு பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்புகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 03 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை தயாரிப்பதற்கென ரூபா 707,912 செலவு செய்யப்பட்டு சேதனப் பசளை தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும் 2022.12.31 ஆந் திகதி வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது குறித்த சேதனப்பசளைகள் 04 நிறைவேற்றுக்குழுக்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | 04 நிறைவேற்றுக் குழுக்களாலும் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப்பசளையின் தரப்பரிசோதனை மற்றும் விற்பனை விலை என்பவற்றை நிர்ணயித்தவுடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சேதனப்பசளையினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 நிறைவேற்றுக்குழுக்களில் காணப்படும் நான்கு சில்லு உழவியந்திரங்களில் 58 எண்ணிக்கையான உழவியந்திரங்கள் மற்றும் 06 உழவு இயந்திரப்பெட்டிகள் ஒரு வருடம் தொடக்கம் 12 வருடங்கள் வரை திருத்தம் செய்து உபயோகிப்பதற்கு நிறைவேற்றுக்குழுக்களினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 13 நிறைவேற்றுக் குழுக்களில் காணப்படும் நான்கு சில்லு உழவியந்திரங்களில் 58 எண்ணிக்கையான உழவியந்திரங்கள் மற்றும் 06 உழவு இயந்திரப்பெட்டிகள் திருத்தம் செய்யக்கூடிய உழவியந்திரங்கள் மற்றும் பெட்டிகள் திருத்தம் செய்து பாவனைக்கு உட்படுத்த நிறைவேற்றுக் குழுக்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உழவியந்திரங்கள் மற்றும் உழவியந்திரப்பெட்டிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ரூபா 864,154 பெறுமதியான 04 மண் பரிசோதனைக்கருவிகள் (Soil Testing Instrument) 04 நிறைவேற்றுக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு குறித்த பரிசோதனைகள் தொடர்பாக பயிற்சி வழங்குவதற்காக ரூபா 32,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறித்த கருவி நாளதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | எமக்கு கிடைக்க பெற்ற மண் பரிசோதனைக் கருவிகளை பயன்படுத்தி மண்ணின் PH,EC ஆகியவற்றை மட்டுமே அறியமுடியும் ஆனால் மண்ணின் பசளை அளவை அளவிட முடியாது இருப்பதனாலும் இக் கருவிக்குரிய இரசாயனங்களை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாலும் இது நாள்வரை இக் கருவியானது பயன்படுத்தபடாமல் உள்ளது. | மண்பரிசோதனைக்கருவிகள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 ஏனைய அமைப்புக்களுக்குரித்தான வளங்களைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 11 நிறைவேற்றுக் குழுக்களின் அரச காணியில் ரூபா 39,705,900 பெறுமதியான கட்டடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற போதும் அவ் காணியினை உரித்தாக்குவதற்கு | 11 நிறை வேற்றுக்குழுக்களும் இயங்கிவருகின்ற அரச காணியை நிலையங்கள் தங்களுக்கு உரித்தாக்குவதற்கான ஆரம்ப கட்டவேலைகள் | காணிகளினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |

கடந்த 32 வருடங்களாக தொடங்கியுள்ளனர். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 06 பதவி நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 370 ஆக காணப்பட்டிருந்தபோதிலும் உள்ளபடியான பதவியணியினர் 165 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 206 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ 11 மிகையாளணியினர் தொடர்பில் 15 நிறைவேற்றுக்குழுக்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 15 நிறைவேற்றுக் குழுக்களிலும் காணப்படும் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினரில் 206 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 11 மிகையாளணியினர் இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவையானவாறு வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக பதவியணியினரை வேறு அலுவலகங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2005 – 2022 காலப் பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் 209 விவசாயிகளின் கடன்மீதி ரூபா 11,676,940 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 15 நிறைவேற்றுக்குழுக்களின் செயற்பாடுகளை நிதி ஒழுங்கு விதி 133 மற்றும் 134 இற்கமைவாக உள்ளகக் கணக்குப் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 15 நிறைவேற்றுக்குழுக்களின் செயற்பாடுகளை நிதி ஒழுங்கு விதி 133 மற்றும் 134 இற்மைவாக இனிவரும் காலங்களில் உள்ளகக் கணக்குப் பரிசோதனையானது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |